# 01 மூட்டை சொன்ன கதை

**பௌ**ராணிகரின் கதைகளில் வருவதைப் போன்று ஒரு நாள் ஒரு மூட்டைப்பூச்சி என்னுடன் பேசிற்று. மூட்டை எப்படிப் பேசிற்று என்றெல்லாம் என்னிடம் கேட்கக்கூடாது. மதனகாமராஜனின் தோழனைப் போன்று எல்லா ஜீவராசிகளுடைய பாஷையும் நமக்கு அத்துபடி.

சாயங்கால மயக்கம்.

கபம், கபமாகப் புகையை உமிழ்ந்து கொண்டு ரெயில் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. தாலாட்டுவது போன்றிருந்ததால் லேசாகக் கண்ணயர்ந்தேன்.

இடது தோட்பட்டையில் ஊசியைப் பாய்ச்சியதைப் போன்று சுரீரென்று ஒரே வலி, தோட்பட்டையே வீங்கிப் போய்விட்டது. தடவிக்கொண்டே திரும்பிப் பார்த்தேன்.

“ வேய், என்ன சௌக்கியமா? ”

மூட்டை ஒன்று தன் தலையையும் உடம்பையும் சேர்த்து ஆட்டிக்கொண்டு நின்றது. கோபம் தாளாமல் பெருவிரலை நீட்டி வட்டச் சுக்கிரனை நசுக்கிச் சங்காரம் செய்வதில் முனைந்தேன். மூட்டையோ ஜாக்கிரதையுடன் பலகை இடுக்கில் போய் இருந்து கொண்டு என்னைப் பார்த்துச் சிரித்தது.



“ என்ன வேய் முகத்தைச் சுளிக்கரே. என்மேல் கோவமா? ஒம்ம ஒடம்பிலே ரெத்தம் ஓடுதா இல்லை, சாக்கடைதான் ஓடுதாண்ணு சாம்பிள் பார்த்தேன். நீர் சுத்தத் தமிழன் அல்லவா?

“நல்லா இருக்கே, எல்லார் உடம்பிலும் ரெத்தம்தான் ஓடுது” என்று மனதில் எண்ணிக்கொண்டு என்னுடைய சங்கார முயற்சியையும் கைவிட்டேன்.

‘‘ யோவ், நமக்கும் ஒம்ம ஊர்ப்பக்கம் தான். ஜனனமே திருநெல்வேலி ஜில்லா போர்டு சத்திரம்தான். பிழைப்புக்கு வேண்டி எல்லாரும் கொழும்பு புறப்படற மாதிரி நானும் ரயிலேறினேன். இங்கேயே குடும்பத்தோடு தங்கியாச்சு. நல்ல வரும்படி போம், பிள்ளை குட்டிகளை எல்லாம் நல்ல நல்ல இடமாப் பார்த்துத் தள்ளி வச்சாச்சு. சிவனேண்ணு இருக்கேன். ஆச்சியும் ஐயரும் காசியாத்திரை போகலாமிண்ணு இருக்கோம். இந்த மானிட ஜன்மங்கள் செய்யற அநியாயத்தைப் பார்த்து மனம் தாளலை. நம்ப பாவமும் தீரும். இந்த பாவத்தையும் பார்க்காமல் இருக்கலாம் இல்லையா?’’ என்றது மூட்டை.

இப்படிச் சொல்லிக் கொண்டு பலகையில் மேலும் கீழும் ஏறி இறங்கி என் பக்கத்திலேயே வந்தமர்ந்து கொண்டது. மூட்டை என்னைத் திரும்பவும் பதம் பார்த்துவிடக் கூடாதே என்று ஜாக்கிரதையாக உடம்பைச் சற்று நகர்த்திக் கொண்டேன். காற்று, சிறுமலைக் காற்று இதமாக வீசிக் கொண்டிருந்ததால் என்னை அறியாமலே கண்ணை மூடிவிட்டேன்.

‘‘யோவ், யோவ் கையை எடுமையா..என்னைக் கொல்லவா பார்க்கிறீர்’’ என்ற அபயக் குரலைக் கேட்டுக் கண் மலர்ந்தேன். அப்போதுதான் மூட்டை என் முழங்கைக்குக் கீழ் மாட்டிக் கொண்டு அவதிப்படுவதைக் கண்டேன். கையை எடுத்தும் மூட்டை திரும்பவும் தனது பழைய பாசறைக்குள் போய் அமர்ந்து கொண்டு தலையை மட்டும் வெளியே நீட்டிப் பேசலாயிற்று.

‘‘ நல்ல ஆளையா நீர். உமக்கு என்ன? இந்த மனுஷ ஜென்மங்களே இரக்கமற்றவர்கள். அடுத்தவங்க பாட்டைக் கொஞ்சங்கூட நினைக்கிறதில்லை. இது என்ன பிரமாதம், தன்னையே நம்பி இருக்கிறவங்களையே கழுத்தை அறுக்கிறவங்களாச்சே உங்க மானிடர்கள். உங்க சங்காத்தமே இப்படித் தான்’’ என்று சலித்துக் கொண்டது மூட்டை.

‘‘ என்ன மூட்டை, எங்கோ வளைச்சு மனிதர்களையே தாக்க வந்துட்டையே’’ என்றேன்.

என் முகத்தில் தேங்கி நின்ற கடுகடுப்பை உணர்ந்த மூட்டை

‘‘இங்க பாரும், நான் ஒண்ணும் ஆதாரமில்லாம பேசமாட்டேன்’’ என்று சொல்லிக் கொண்டே சற்று முன்னால் நகர்ந்து வந்தது.

‘‘அங்கே பாரும். அதே இடம் தான். அங்கேதான் அந்தப் பையன் ரா முழுசும் முசல் மாதிரி முழிச்சுகிட்டு இருந்தான். அதை நினைச்சாலே என் மனம் இப்போ கூட கண்ணீர் வடிக்கிறது.’’

மூட்டை சுட்டிக் காட்டிய இடம் சும்மா கிடந்தது.

‘‘ அந்தப் பையன் இருக்கானே, அவனுக்குக் கூடிப் போனா எட்டு ஒன்பது வயசுதான் இருக்கும்.’’

‘ஓகோ, மூட்டை பெரிய கதையே சொல்லும் போலிருக்கிறதே’ என்று மனதில் எண்ணிக் கொண்டு மூட்டை சொல்வதைக் கேட்கலானேன். தூக்கம் எங்கோ போய்விட்டது.

ஆபத்து ஒன்றுமில்லை என்பதை உணர்ந்ததும் மூட்டை தன் மறைவிடத்திலிருந்து வெளியே வந்து என் காதருகில் அமர்ந்து கொண்டு கதையை ஆரம்பித்தது.

‘‘ அந்த மனுஷன் இருக்கானே, அவன் தான் அந்த வீட்டு ஐயா, அவனுக்கு வடக்கே எங்கோ வேலையாம், சீவிவிட்ட பென்சில் குச்சி மாதிரி இருப்பான். அவன் பெண்சாதி இருக்காளே, அவளோ அடேயப்பா, அவ என்ன பொம்பளையா? வைக்கோல் படப்புத்தான். அந்தத் தாடகைக்கு ஒரு மகள். தேரை விழுந்துபோன மாதிரித்தான். இப்போ எல்லாம் அப்படி நோஞ்சானாக, ஒடிஞ்சி விழற மாதிரி இருப்பது தானே அழகு என்கிறீர்கள்.’’

அஃறிணைப் பொருள் ஆறறிவு படைத்த மனித வர்க்கத்தைக் குறைத்துப் பேசுவது எனக்குப் பிடிக்கவில்லை. இருந்தாலும் கதை கேட்க வேண்டுமென்பதற்காகப் பேச்சை மாற்றினேன்.

‘‘மூட்டையாரே நம்மகிட்டே என்ன விளையாடுரியா, பையனைப் பற்றி ஆரம்பிச்சிட்டு வேறே என்னவெல்லாமோ அளக்க வந்துட்டையே’’ என்றேன்.

‘‘ஓ, பையனை மறந்துவிட்டேன் என்றா நினைக்கிறீர்’’ கிடையவே கிடையாது. இப்பேர்ப்பட்ட ஆட்கள் வீட்டிலேதான் அந்தப் பையன் வேலை செய்திருக்கான். ஐயோ பாவம். அவனை எப்படி வளத்திருக்காங்க தெரியுமா? திருவாளத்தான் குதிரை வளர்த்த மாதிரித்தான் பையனைப் பார்த்தா பரிதாபமா இருந்தது. நெஞ்சு எலும்பை எல்லாம் எண்ணிப்போடலாம்... இந்த எருமை மாடுகள் இருக்கே. எல்லாமே வீசின கையும், வெறுங்கையுமா ஸ்டேஷனுக்கு வந்தாங்க. ஆனா, அந்தப் பையன் தலையிலே கழுதை மேலே பொதியேத்தின மாதிரி ஏத்திக்கிட்டு வந்தாங்க...

‘‘பையன் சாமான்களைக் கொண்டு வந்து வைச்சதும் வைக்காமலும் இருக்கும் போதே வண்டி வந்துட்டது. அவ்வளவு தான், அந்த மனுஷன் இருக்கானே சிங்கம் மாதிரி பையனைப் பார்த்துச் சத்தம் போட்டான். எருமை மாடாட்டமா எல்லாமே போய் உள்ளே உட்கார்ந்ததும், அந்தப் பையன்தான் பம்பரக்காய் மாதிரி எல்லாத்தையும் தூக்கி வச்சான். ஒரு பெட்டி பாரும், பையனைவிட ரெண்டு மடங்கு பெரிசு. தூக்கும் போது அவன் செத்தே போயிட்டாண்ணு தான் நான் நினைச்சேன். ஆமா, கண் எல்லாம் நிலைகுத்தி நிண்ணுட்டுது. ஒரு போர்ட்டர் தான் வந்து உதவி செஞ்சு பையனைக் காப்பாத்தினான்... அட பாவிங்களா இவங்களுக்கும் ஆண்டவன் பிள்ளை குட்டிகளைக் கொடுக்கானே’’ என்று சலித்துக் கொண்டது மூட்டை. சற்று நேரம் கழித்து மூட்டை மீண்டும் கதையைத் தொடர்ந்தது.

‘‘வண்டியில் ஏறின பிறகும் அவங்க அந்தப் பிள்ளையை விட்டாங்களா? வழி நெடுகிலும் பையனின் உசிரையே வாங்கிப் போட்டாங்க. அந்தத் தாடகை அம்மா இருக்காளே, அவளுக்குத் திடீரென்று காப்பி மேலே ஆசை விழுந்துட்டா பையனைக் தான் பிடிச்சுக் கோபிப்பா. அந்த ஐயாவுக்கு சுங்கானிலே பொகையிலே தீர்ந்துட்டா, அவன் தான் நாய் மாதிரி ஓடிப்போய் வாங்கியரணும். அதுமட்டுமா அந்தப் பொண்ணுக்கு மல்லியப் பூவும் அவன் தான் வாங்கியாரணும். இத்தோடே ராமுச்சூடும் அவங்க எல்லாம் கோயில் மாடு மாதிரி தூங்கும் போது அவன்மட்டும் தோட்டி மாதிரி அவங்க சாமானைப் பாத்துக்கிட்டு இருக்கணும். இல்லையோ எல்லோருமே போட்டுத் திட்டுவாங்க, அடிக்கவும் செய்வாங்க... இவ்வளவு கார்வார் பண்ணிப் போட்டு கையை விரிச்சுட்டாங்கைய்யா’’ என்று சொல்லிக் கொண்டு மூட்டை நிறுத்திக் கொண்டது.

மூட்டை என்ன பாதியில் கதையை நிறுத்துகிறதே என்று பார்த்த போது மூட்டை வெகு ஜாக்கிரதையாகத் தனது பாசறைக்குள் போய் உட்கார்ந்து கொண்டு தலையை நீட்டிற்று.

‘‘என்ன மூட்டையாரே?’’ என்றேன்.

‘‘இல்லே, ஒங்க மனுஷாளைப் பற்றிப் பேசறபோது ஜாக்கிரதையாக இருக்கணும் பாரு’’ என்று சொல்லிக்கொண்டே கதையைத் தொடர்ந்தது.

‘‘யோவ், காலம்பர டிக்கட் சோதிக்கறவன் வந்தபோது பையனை அவன் கையிலே பிடிச்சுக் கொடுத்து போட்டாங்க.’’

‘‘என்ன? ’’

‘‘ என்னவா? யோவ் அந்த யோக்கியர் பையனுக்கு மட்டும் டிக்கட் எடுக்கவே இல்லை. பரிசோதகன், பையனைப் பிடிச்சு அறையும் போது யோக்கியராட்டமா அந்த ஐயாவும் அம்மாவும் என்ன சொன்னாங்க தெரியுமா? அந்தப் பையனை அவங்களுக்கு தெரியாதாம். எங்கையோ அவங்களுக்குப் பெட்டி தூக்கிவைச்சானாம். பெறவு திருட்டுத்தனமா ரெயிலேறி அவங்க கூடவே வந்துட்டானாம்.

‘பையன் என்ன சொன்னான்? ’

‘‘ அந்த ஏழைப் புள்ளைக்கு என்ன சொல்ல முடியும். அவங்க வீட்டு வேலைக்காரன்னான், ஐயோ அவன் போன போது அவங்க எல்லாரையும் பார்த்தானே அந்தப் பார்வை கல் நெஞ்சையும் கறைச்சுப் போடும். ஆனா, அவங்களோ, அதைப் பார்த்துட்டு அப்படியே இருந்ததோடு, பையனையும் வாய்க்கு வந்தபடி எல்லாம் திட்டினாங்க. அவன் பொய் சொல்லி அவங்க கௌரவத்தையே கெடுத்துட்டானாம். நல்ல கௌரவமையா கௌரவம்,’’

எனக்கே அதைக் கேட்க சங்கடமாக இருந்தது.

‘‘ யாராவது பையனுக்கு வேண்டிப் பேசலையே?’’ என்றேன்.

“ யார் பேச, கௌரவமான ஆளுகளைக் குறைச்சுப் பேசுவாங்களா? அவங்களோட உடையும் பகட்டும் பார்த்து எல்லாரும் அவங்க பொய்யை நம்புறாங்க. ஏண்ணா பெரிய மனுஷங்க இல்லையா, அந்தப் பிள்ளையோ ஏழை. யார் நம்புவா? ஏழை சொல் அம்பலம் ஏறுமா? எல்லாரும் சேர்ந்து அவனை ‘பிக்பாக்கெட் ’ பயல் என்றாங்க. அது மட்டுமா? அவனை மைனர் ஜெயிலுக்கும் கொண்டு போகும்படி சிபார்சும் செய்தாங்க. என்னால் இதைப் பார்த்துக்கிட்டு சும்மா இருக்க முடியலை. கோபத்தை எல்லாம் கூட்டி இப்படி ஒரு கொத்துக் கொத்தினேன் பாரும்?”என்று சொல்லிக் கொண்டே என் முதுகையே பதம் பார்த்து விட்டது மூட்டை. என்னால் வலியை பொறுக்க முடியவில்லை. மூட்டையைக் கொல்ல கையை ஓங்கி அறைந்தேன். மூட்டையோ தன் பாசறையான பலகை இடுக்கிற்குள் போய் அமர்ந்து கொண்டது.

“ என்ன சார் விடிஞ்சு போச்சே. பலகையைப் போட்டு அறைகிறீர்கள் வீட்டு நினைப்போ” என்று சொல்லிக் கொண்டே என்னை உசுப்பினார் சக பிரயாணி.

மூட்டைக்கும் எனக்கும் நடந்த சம்பாஷணை அவருக்கு எங்கே தெரியும்.

**-டி. செல்வராஜ்-**
**சரஸ்வதி களஞ்சியம்**

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| பௌராணிகன் | - | புராணக்கதையை பிரசங்கம் செய்வோன் |
| சங்காரம் | - | அழித்தல் |
| இடுக்கு | - | ஒடுங்கிய இடம் |
| ஜென்மம் | - | பிறப்பு |
| அபயம் | - | அடைக்கலம் |
| பாசறை | - | தங்குமிடம் |
| சங்காத்தம் | - | தொடர்பு, சம்பந்தம் |
| சுங்கான் | - | புகைபிடிக்க பயன்படுத்தப்படும் குழாய் |
| அறை | - | அடித்தல் / தட்டுதல் |

## கிரகித்தற் பயிற்சி

1. இக்கதையில் வரும் சிறுவனுக்குப் பெட்டி தூக்க உதவி புரிந்தவர் யார்?
2. நம்பி இருக்கிறவங்களையே கழுத்தறுக்கிறவர்கள் மானிடர்கள் என மூட்டைப் பூச்சி கருதுவதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சி யாது?
3. இக்கதையின் மையக்கருத்து யாது?
4. இக்கதையின் மையக்கருத்தை விளக்குவதற்குக் கதாசிரியர் கையாண்டுள்ள உத்திகள் எவை?
5. 'மூட்டைப் பூச்சியின் குரலாக ஒலிப்பது கதாசிரியரின் குரலே' என்ற இக் கூற்றின் பொருத்தப்பாட்டினை விளக்குக.
6. பின்வரும் தொடர்கள் மூலம் ஆசிரியர் கூற முற்படும் கருத்து யாது எனச் சுருக்கமாகக் கூறுக.
   - i. நெஞ்சு எலும்பை எண்ணிப் போடலாம்
   - ii. தாடகை அம்மா
   - iii. சீவி விட்ட பென்சில் குச்சி
7. இக்கதையினை வாசித்த பின்னர் உங்களுக்கு ஏற்பட்ட மனவுணர்வினை விளக்குக.

## செயற்பாடு

**குழுவாக இணைந்து பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.**

1 கதையில் வரும் சிறுவனை மையமாகக் கொண்டு பின்வரும் தலைப்புகளில் கலந்துரையாடி அறிக்கைப்படுத்துங்கள்.

- i. சிறுவன் பட்ட துன்பங்கள்
- ii. சிறுவன் மீதான பரிவை கதாசிரியர் வெளிப்படுத்தும் முறை.
- iii. இக்கதையில் இடம்பெறும் சிறுவனும் சிறுவர் உரிமைகளும்

2 கதையில் வரும் வேற்றுமொழிச் சொற்களை இனங்கண்டு பட்டியலிடுங்கள்.

3. ரெயில் வண்டியில் நடைபெற்ற சம்பவத்தை உரையாடல் வடிவமாக எழுதுங்கள்.

4. ''ஏழை சொல் அம்பலம் ஏறட்டும்'' என்னும் தலைப்பில் கதை ஒன்று எழுதுங்கள்.

5. 'மனிதநேயம் ' என்ற தலைப்பில் ஒரு கவிதை ஆக்குங்கள்.

## மொழிவளம்

### ஒலிப்பில் மயக்கம் விளைக்கும் எழுத்துக்கள்

சொற்களில் **லகரம்** இருக்க வேண்டிய இடத்தில் **ளகர**த்தையும், **ளகரம்** இருக்க வேண்டிய இடத்தில் **லகர**த்தையும் எழுதும் போது கருத்து மாறுபடுவதால் வாக்கியத்தின் பொருளிலும் மாறுபாடு ஏற்படும். இளமை முதலே ஒலிப்பில் வேறுபடும் சொற்களை திருத்தமாக ஒலித்துப் பழகி வந்தால் எழுத்திலே மயக்கம் தோன்றாது. எனவே பின்வரும் சொற்களிலிருந்து எழுத்து வேறுபாடுகளை விளங்கிக்கொள்வோம்.

**ல, ள, ழ வேறுபாடு**

| | | |
|---|---|---|
| அலகு | - | பறவையின் சொண்டு, அளவு |
| அழகு | - | வனப்பு, சிறப்பு |
| அளகு | - | காட்டுக் கோழி, சேவல் |
| அலி | - | ஆண் பெண் தன்மையற்றவர் |
| அழி | - | கெடுத்தல் / ஒழித்தல் |
| அளி | - | கொடுத்தல் / வழங்குதல் |
| அலை | - | திரை |
| அழை | - | கூப்பிடு |
| அளை | - | புற்று |
| உலை | - | வருத்து, கொல்லனின் உலை |
| உழை | - | முயற்சி செய் |
| உளை | - | சிங்கம் குதிரை என்பவற்றின் பிடரி மயிர், சேறு, அழுகை |
| ஒலி | - | ஓசையிடல் / சத்தம் |
| ஒழி | - | அழித்தல் |
| ஒளி | - | பதுங்கல் / வெளிச்சம் / மறைதல் |
| தாலம் | - | பனை |
| தாழம் | - | அமைதி |
| தாளம் | - | ஒரு வாத்தியம் |

**ண, ந, ன வேறுபாடு**

| | | |
|---|---|---|
| அணல் | - | தாடி, கழுத்து |
| அனல் | - | சூடு, நெருப்பு |
| அண்மை | - | சமீபம் |
| அன்மை | - | தீமை |
| ஆணை | - | சத்தியம் / கட்டளை |
| ஆனை | - | யானை |
| கணம் | - | கூட்டம் |
| கனம் | - | பாரம் |

| | | |
|---|---|---|
| கண்ணி | - | அரும்பு, மாலை வகை, பறவைகளைப் பிடிக்கும் பொறி |
| கன்னி | - | குமரி |

**ர, ற வேறுபாடு**

| | | |
|---|---|---|
| ஈரல் | - | ஓர் உறுப்பு |
| ஈறல் | - | துக்கம் |
| சுரா | - | கள் |
| சுறா | - | மீன் |
| உரவு | - | வலிமை |
| உறவு | - | இனம் / சொந்தம் |
| அரவு | - | பாம்பு |
| அறவு | - | ஒழிகை அற்றுப்போதல் |
| இரக்கம் | - | மனவுருக்கம் / கருணை |
| இறக்கம் | - | சரிவு |

## பயிற்சி

பின்வரும் சொற்களுக்கு அகராதி கொண்டு பொருளறிக; வாக்கியம் அமைக்குக.

1. வாழ் -
   வாள் -
   வால் -
2. ஆழ் -
   ஆள் -
   ஆல் -
3. இழை -
   இளை -
   இலை -
4. அழி -
   அளி -
   அலி -
5. கிழி -
   கிளி -
   கிலி -
6. கூரியது -
   கூறியது -
7. குரவை-
   குறவை-

## ஆக்கத்திறன்

### துண்டுப்பிரசுரம்

**துண்டுப்பிரசுரத்தில் அமைய வேண்டிய அம்சங்கள்**

❖ நோக்கத்தைப் புலப்படுத்தும் விதத்திலான கவர்ச்சியான தலைப்பு.
❖ குறித்த விடயம் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறப்படுதல்.
❖ வாசிப்பவர் மனதைக் கவரும் விதத்தில் அமைதல்.

உதாரணம் :- கவர்ச்சியான சொற்கள், சொற்றொடர்கள், வசனம்

❖ துண்டுப்பிரசுரத்தை வெளியிடுபவர், (பெயர் / நிறுவனம் / அமைச்சு) வெளியிடப்படும் திகதி

**துண்டுப்பிரசுரத்தால் ஏற்படும் நன்மைகள்**

❖ இலவசமாக விநியோகிக்கப்படுவதால் தகவல்கள் விரைவாக மக்களிடம் சென்றடையும்.

❖ குறுகிய காலத்தில் குறித்த தகவல்களைப் பரப்புவதால் எதிர்பார்க்கப்படும் பெறுபேற்றை (சுகாதாரம், விவசாயம், அரச அறிவித்தல் சார்ந்தவை) விரைவில் பெற்றுக் கொள்ளலாம்.

❖ பொதுத் தகவலுக்காக விநியோகிக்கப்படுபவை மக்கள் மனதிற் கூடிய தாக்கத்தை ஏற்படுத்தும். (சுகாதாரம், விவசாயம், அரச அறிவித்தல் சார்ந்தவை)

**மாதிரி துண்டுப்பிரசுரம்**

**சிறுவர் உரிமை பேணுவோம்**

அன்பானவர்களே

நீங்கள் 14 வயதுக்கு உட்பட்டவரா? உங்களுக்குத் தேவையான சகல விடயங்களும் திருப்திகரமாகக் கிடைக்கின்றதா?

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

கல்வி ...........

போஷாக்கு.......

பாதுகாப்பு.........

அன்பு.............

பதில் - இல்லை எனில் நீங்கள் சிறுவர் உரிமை மீறப்பட்டவராகக் கருதப்படுவீர்கள்.

- ♦ சிறுவர்களையும் வாழ விடுங்கள்
- ♦ சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்போம்.

உடனடித் தொடர்புகளுக்கு,
சிறுவர் உரிமைகள் விழிப்பு நிலையம்

திகதி.....

**பயிற்சி**

“ இயற்கைப் பசளையை வீணாக்காதீர்” என்ற பொருளில் துண்டுப்பிரசுரம் ஒன்று தயாரியுங்கள்.